5. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் அவையில் நடந்து கொண்ட விதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மரபிற்கும், வரலாற்றுக்கும் மாறாக சட்டமன்றத்தையே களங்கப்படுத்துகின்ற வகையிலே ஏதோ இங்கே ஒரு சினிமா படப்பிடிப்பில் வசனம் பேசுவதைப்போல இங்கே தரக் குறைவாக—அதிலும் கௌரவமாகவும் நடந்துகொள்ளவில்லை—கண்ணியக் குறைவாக, தரக் குறைவாக, அவமானகரமாக நடந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவருடைய நடவடிக்கையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11– 55

3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவரது கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவைநடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையிலும், பிற வகைகளிலும் செயல்பட்ட காரணத்தினால் பேரவை விதி 226–ன்கீழ் உரிமை மீறல் குழுவிற்கு இதை அனுப்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

5. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் அவையில் நடந்து கொண்ட விதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் பேசுகிறபோது அவர்கள் சொன்ன கருத்து, அதற்கு மாற்றுக் கருத்து என்று ஒரு பெரிய விவாதம் இங்கே நடைபெற்றது. இதுபோன்ற நேர்வுகளில் ஒவ்வொன்றிற்கும் நாம் உரிமை மீறல் குழுவிற்கு அனுப்புவது என்று ஆரம்பித்தால் அது சரியாக இருக்காது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கருதுகிறேன். அதுதான் என்னுடைய கருத்து. அதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்,* Privileges Committee–*ல் உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள்கூட உறுப்பினர்களாக உள்ளனர். அது* one party Committee *இல்லை. அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும்* Privileges Committee–*ல் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்கள் அவையில் நடந்துகொண்ட விதம் பற்றி* Privileges Committee *விசாரிக்கும். ஆகையால் இதுபோல் முறையற்ற செயலை அனுமதிக்க முடியாது. இங்கே தெருச் சண்டை போல் இருந்தால் அது எப்படிச் சரியாக வரும்? ஏற்றுக் கொள்ளமுடியும்?* I won't allow this. *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்ட விதம், அவர் பேசிய அருவருக்கத்தக்க கீழ்த்தரமான பேச்சுகள் இவற்றையெல்லாம் இங்கேயே அமர்ந்து நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அனைவரும் பார்த்தார்கள்; அனைவரும் கவனித்தார்கள். இன்று எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்ட விதத்திற்கும், அவருடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதத்திற்கும் தண்டனை அளிக்க வேண்டும் என்றால், அவர்களை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்திருக்க வேண்டும். ஆனால் அதைத் தவிர்த்து, மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்கள் மிகவும் குறைந்தபட்ச நடவடிக்கையாக இந்தப் பிரச்சினையை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்புவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தனது முடிவை அறிவித்த பிறகு வேறு எந்த உறுப்பினரும் அதைப்பற்றி கேள்வி கேட்க விதிகளில் இடம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தகுதியில்லாதவர்களுக்குப் பெரிய பதவி திடீரென்று வாய்த்துவிட்டால் *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்று எதிர்க்கட்சித் தலைவரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லுகிறேன். கடந்த ஆட்சியில் நடந்த தவறுகளின் காரணமாக, நிருவாகச் சீர்கேட்டின் காரணமாக, எங்கும் மலிந்திருந்த ஊழலின் காரணமாக, மக்கள் ஒரு ஆட்சி மாற்றத்தை விரும்பினார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கடந்த சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி இருந்தாலும், கூட்டணி இல்லாவிட்டாலும் இதே முடிவைத்தான் நாங்கள் பெற்றிருப்போம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவது என்று தமிழக மக்கள் முடிவெடுத்துவிட்டார்கள். அதன்படிதான் கடந்த சட்டமன்றத் தேர்தலில் முடிவுகள் அமைந்துவிட்டன. தே.மு.தி.க.–வின் அதிர்ஷ்டம் எங்களுடன் அவர்கள் கூட்டணி சேர்ந்தார்கள். அதனால்தான் அவர்களுக்கு 41 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதனால்தான் இத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று இந்த அவையில் வந்து தே.மு.தி.க.–வின் சார்பில் அமர்ந்திருக்கிறார்கள்.

நண்பகல் *12–00*

இந்தக் கூட்டணியில் எனக்கு சிறிதும் விருப்பமில்லை என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். என்னுடைய கட்சிக்காரர்களைத் திருப்தி செய்வதற்காகத்தான் இந்தக் கூட்டணிக்கு நான் சம்மதித்தேன். இந்தக் கூட்டணி அமையாவிட்டாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டிருக்காது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தே.மு.தி.க. சேராவிட்டாலும், கூட்டணியில் இணையாவிட்டாலும், என்ன முடிவைப் பெற்றோமோ, என்ன முடிவுகளை சாதித்துக் காட்டினோமோ

அதைவிட அதிகமாக கூடுதல் இடங்கள் கிடைத்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தே.மு.தி.க.–விற்கு விட்டுக்கொடுத்த தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெற்றி பெற்றிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதர்சனமான உண்மையை இந்த நேரத்தில் அவர்களுக்கும் புரிய வைக்கிறேன். அனைவருக்கும் புரிய வைக்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி சேர்ந்ததால்தான் தே.மு.தி.க.–விற்கு இத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் கிடைத்தார்கள். அதனால்தான் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தும் கிடைத்தது. பிரதான எதிர்க்கட்சி என்கின்ற அந்தஸ்தும், தகுதியும் கிடைத்தது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி சேராவிட்டால் தே.மு.தி.க.-விற்குக் கடந்த தேர்தலில் ஒரு இடம்கூட கிடைத்திருக்காது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

தகுதியற்றவர்களுக்கு ஒரு பெரிய பதவி கிடைத்தால் அதில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதுகூடப் புரியாமல் மிகவும் அருவருக்கத்தக்க வகையில் நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது, இவர்களுடன் கூட்டணி சேர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலைச் சந்தித்ததே என்று நினைக்கும்போது, நான் வருத்தப்படுகிறேன். உள்ளபடியே அதற்காக வருத்தப்படுகிறேன்; வெட்கப்படுகிறேன்.

இன்று எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும்போது, அவருடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும்போது, ஒன்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அவர்களுக்கு வரவேண்டிய ஏற்றம், வரக்கூடிய ஏற்றம் எங்களால் அவர்களுக்கு வந்து முடிந்துவிட்டது. முடிந்துவிட்டது. இனிமேல் அவர்களுக்கு இறங்குமுகம்தான். அதை சரித்திரம் சொல்லும் என்பதைச் சுட்டிக்காட்டி நான் அமைய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமில்லை. உட்காருங்கள். Please sit down. (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கம் அளித்துவிட்டார்கள். மேலும் விளக்கம் தேவையில்லை. Please sit down. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசிவிட்டார்.